Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# The Nature of Sangam Women

**R.Sathiyabama,** Assistant Professor, Tamil Department, Caussanel College of Arts and Science, Muthupettai, Ramanathapuram, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-8974-9119**
**DOI: 10.5281/zenodo.6619558**

## Abstract

*The Sangam literature is the source and first step in examining the status of women from time to time. Women are considered in a respected manner. Women are revered as the eyes of our country. It is commendable that only the highest creative woman in the world is the Sangam woman. Sangam literary songs are increasingly revealing the talent and charm of Tamil women. Apart from that, many messages about beauty, music, sports and the merit of the women of the Sangam period can be learned through the Tamil Sangam collections. Feminist poets assert that women are equal to men in education in the Sangam times. Hence; the paper deciphers the nature of Sangam women from the select Sangam literary texts.*

**Keywords:** Sangam, Literature, women, Nature, Feminist.

## References

[1] Dr A.M. Parimanam. *Purananuru*. New Century Book House New Century Book House (P) Ltd 41. B, Sitco Industrial Estate, Ambattur, Chennai.600098.
[2] Dr.K.V. Bala Subramaniam. *Nattrinai*. New Century Book House (P) Ltd.41.B. Sitco Industrial Estate, Ambattur, Chennai.600098.
[3] Thamilannal. *Tolkappiyam – Porulathikaram*. 48, Thanappa First Street, Madurai.625001.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்ககால மகளிரின் இயல்பு

**இரா.சத்தியபாமா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-8974-9119**

**DOI: 10.5281/zenodo.6619558**

**ஆய்வுச்சுருக்கம்**

காலம்தோறும் பெண்களின் நிலை குறித்து ஆராய மூல வாயிலாகவும்முதற் படியாகவும் இருப்பது சங்க இலக்கிய நூல்களே. மங்கையர் குலத்தின் மாணிக்க தொட்டிலாய் விளங்குபவர்கள் பெண்கள். பெண்களை நம் நாட்டின் கண்கள் என்று போற்றப்படுகிறார்கள. உலக படைப்புகளில் உயர்ந்த படைப்பு பெண் மட்டுமே சங்ககால மகளிரின்வீரம் என்பதுபோற்றுதலுக்குரியது. மகளிரின் வீரம் பற்றி சங்க இலக்கியப் பாடல்கள்அதிக அளவில் புலப்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாது சங்க கால பெண்களின் அழகு, இசை, விளையாட்டு, தகுதி என்று பல செய்திகளை இந்நூல்களின் வாயிலாக அறிய முடிகின்றது. கல்வியில் ஆண்களுக்கு பெண்கள் நிகரானவர்கள் என்றுநிரூபிக்கும் வகையில் பெண்பாற் புலவர்கள் அதிகம் இடம்பெறுகின்றனர் இப்படி சங்ககால மகளிரின் இயல்புகள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்:** சங்கம், இலக்கியம், பெண், இயல்பு, பெண்ணியம்.

## முன்னுரை

உலக படைப்புகளில் உயர்ந்த படைப்பு பெண்ணே அனைத்து உயிர்களையும் உண்டாக்குவதும் காப்பாற்றுவதும் உயிர்ப்பிப்பதும் பெண்ணே. அன்பு, ஆதரவு, பகிர்தல் இது மூன்றுக்கும் பொருத்தமாய் மனிதகுலத்தில் வாழ்பவள் பெண் அவளே ஆக்கலும் காத்தலுமானஆகித் தொன்மத்தாய் வடிவில் உள்ளாள். 'சக்தி 'மகத்தான ஆற்றல் படைத்த பெண் தெய்வம் என்று இந்துமத வழிபாடு தெரிவிக்கிறது. மனைவியே 'மனையறத்தின்வேர்'என்று சேக்கிழார் புகழ்ந்துள்ளார் பெண்களின் பெருமையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம். சங்ககாலத்தில் பெண்கள் வாழ்வில் காதல் செய்து கணவனைத்தேர்ந்தெடுக்கும் நிலையும் உரிமையும் இருந்தது. சுமார் 30க்கும் மேற்பட்ட பெண்டாற் புலவர்கள் இலக்கிய பாடலைப்பாடும் அளவிற்குபெண்கள் வாழ்வுஇருந்தது .ஔவை போன்ற பெண்பாற் புலவர் அதியமானின் அவைக்களப் புலவராகவும் முதன்மை அமைச்சராகவும் அறிவுரை சொல்வோராகவும், தூது செல்வதற்கு உரிய உரிமை பெற்றவராகவும் வாழ்ந்துள்ளதைஅறியலாம்.

## பெண்களின் வீரம்

சங்க காலத்து மறக்குடிப்பெண்கள் நிலை மிகவும் வீரம்மிக்கதாக இருந்ததற்கான சான்றுகள் சில காணப்படுகின்றன. புறநானூற்று பாடல் ஒன்றில் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் பலர் பெற்ற என் மகன் பகைவர் படைக்கு அஞ்சி புறங்கொடுத்து மாண்டு விட்டான். என்று பலரும் அவளிடம் வந்து கூற

அந்த மூதாட்டி என் மகன் போரில் அஞ்சி இறந்தான் என்பது உண்மையானால் 'அவன் பாலுண்ட என் மார்பகத்தை அறுத்தெறிவேன் என்றாள் .

**"மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்**
**முலை அறுத்திடுவென் யான்" ( புறம்-பா. எண்278)**

என்ற பாடல்அடிகள் மூலம் மூதாட்டியானாலும் வீரம்மிக்கதாய் என்ற உண்மைபுலப்படுத்துகின்றது. மறக்குடியில் பிறந்த மகள் ஒருத்தியின் துணிவையும் வீரத்தையும் ஒக்கூர் மாசாத்தியார் சிறப்பாக சொல்கிறார். முதல் நாள் போரில் தன் தந்தையை இழக்கிறாள். மறுநாள் போரில் தன் கணவனை இழக்கிறாள், மீண்டும் போர்ப்பறை கேட்டு தன் ஒரே மகனை அழைத்து வெண்மையான ஆடையை உடுத்தி பரந்து கிடந்த குடுமி தலைக்கு எண்ணெய் தடவி கையில் வேலைக் கொடுத்து போர்க்களம் நோக்கி போய் வா என்று அனுப்புகிறாள்.

**"வேல் கைக் கொடுத்து வெளிது விரித்து உரீஇ**
**பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே" ( புறம் - 279)**

என்ற பாடல் வரிகள் பெண்ணின் வீரத்தை வெளிப்படுத்துகின்றது.

**விளையாட்டு**

மலைவாழ் மகளிர் தினனப் புனங்களில் கிளியோட்டி தினைப்புனத்தில் விளைந்த முற்றிய தினைக் கதிர்களைக் காத்தனர் என்பது சங்க இலக்கியத்தில் பலவிடங்களில் பேசப்படுகின்றது.

**"கனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ**
**புனக்கிளி கடியும் பூங்கட் பேதை" (குறுந்-142)**

களைப் பூவினை பறித்து மாலை தொடுத்தலும், தினைப் புனத்தில் கிளி ஓட்டுதலும் மலைவாழ் மகளிரின் விளையாட்டுக்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. பொதுவாக இளமகளிர் அக்காலத்தில் கவலையில் தோயாமல் எப்பொழுதும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். என்பதை நற்றினைப் பாடல் கொண்டு அறியலாம்.

**" விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது**
**இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல்**
**அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம் என**
**குறுநுரை சுமந்து நறு மலர் உந்தி**
**பொங்கி வருபுதுநீர் நெஞ்சு உண ஆடுதம்" (நற்- 68)**

என்ற நற்றினை பகுதிகளில் மகளிர் வீட்டின் வெளியே சென்று விளையாடாமல் இருப்பதுஅறமாகாது என்பதும் அதனால் செல்வம் தேய்ந்து விடும் என்பதும் தெரியவருகின்றது. விளையாடும் மகளிர் கூட்டத்தினைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் சங்ககாலப் புலவர்கள் 'ஓரையாமம்' என்றும் பொய் தன் மகளிர் என்றும் குறிப்பிடுகின்றனர். மகளிர் அந்நாளில் விளையாடிய விளையாட்டு ஓரை எனப்பட்டது. வண்டலயர்தல், சிற்றில் சிதைத்தல், துணங்கையாடுதல், குரவை ஆடுதல் முதலிய விளையாட்டுகள் மகளிர் விளையாட்டுகளாக சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்றன.

**"பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை**
**ஆய்கதிர் நெல்லின் வரம்புஅனைத்துயிற்றி**

**ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்" (குறுந் -238)**

என்ற குறுந்தொகைப் பாடல் பகுதியும்

**"எவல் எறி உலக்கை வாழைச் சேர்த்தி**

**வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்**

**முடந்தை நெல்லின் விளைவயல்" ( பதிற் - 3 - 29)**

என்ற பதிற்றுப்பத்து பாடப்பகுதியும் மகளிர் விளையாட்டினைக் குறிப்பிடுகின்றது.

**அழகு**

பெண் ஒருவரின் அழகினை மதுரை எழுத்தாளன் சேர்ந்தன் பூதன் என்ற புலவர்

**"பூவொடு புரையும் கண்ணும் வேய் என**

**விறல் வனப்பு எய்திய தோளும் பிறை என**

**மதி மறுக்குறூம் நுதலும்" (குறுந் - 226)**

கண்கள் பூவை போலவும், தோள்கள் மூங்கில் போலவும், நெற்றி பிறை போலவும் உள்ளன என்றும் விளக்குகிறார். பெண்ணென்பவள் மென்மையானவள், உலகின் இடையூறு நிலைகளையும் விலங்கு முதலியவற்றால் நேர்ந்திடும் இடுகண்களையும் உணராதவர் பொய்மையும் சூதும் அறியாத அவர் உள்ளத்தில் வலிமையால் தமை பாதுகாத்துக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக ஓம்பும் ஆற்றல் பெற்றவர்கள்.

**இசை**

பெண்களுக்கு குரல் வளம் என்பது இயற்கையிலேயே இனிமை வாய்ந்தது எனவே இசை தமிழ் மகளிர் வழியில் பெரிதும் வளர்ந்தது தாலாட்டுபாடல் என்பது தாய்மார்கள் வளர்த்த இயல் இசை தமிழ் இலக்கியம் யானை முதலிய காட்டு விலங்குகளும் மற்றவர்களும் அவர்தம் இசைக்கு வயப்பட்டுத் தம் கொடூரத் தன்மையை மறந்து நின்ற மையை சங்க இலக்கியங்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

**"ஆறுகலை கள்வர் படை விட அருளின்**

**மாறுதலை பெயர்க்கும் கருவின் பாலை" (பொரு-21-22)**

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றது.

**சங்ககால பெண்பாற் புலவர்கள்**

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என சித்தரிக்கப்படும் சங்ககாலம் தமிழ்ப் புலவர்கள் நிறைந்து வழிந்த காலம். அக்காலத்தில் ஆண்பாற் புலவர்களுக்குச் சளைக்காமல் பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக காணப்பட்டனர் சிறந்த படைப்புகளை பெண்பாற் புலவர்கள் தமிழுலகுக்கு இருந்தபோதும் அவர்களின் இயற்பெயர் தொகுப்புகளில் தனிப் பாடல்களை தொகுப்புகளை இப்பெண்பாற புலவர்கள் தமிழ் உலகுக்கு ஈந்த போதும் அவர்களின் இயற்பெயர் அத்தொகுப்புகளிலோ தனிப்பாடல்களிலோ ஈண்டு குறிப்பிடப் படவில்லை. பிற்காலத்தில் பெண்பாற் புலவர்களின் பெயர்கள் எவ்வாறு சுட்டப்பட்டதெனின் அவர்கள் எழுதிய இலக்கியங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்களில் இருந்தே அவர்களுக்கு பெயர் வைக்கப்பட்டது என்பதே உண்மை. சான்றாக காக்கையைப் பற்றி பாடியவர் காக்கைபாடினியார், ஔவையார், அஞ்சில் அஞ்சியார், அணிலாடு முன்றிலார், ஒக்கூர் மாசாத்தியார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினியார் என்று சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் இருந்தனர்.

**பெண்களின் தகுதி**

**"கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்**
**நல்லிதின் புரையும் விருந்து புறந்தருதலும்**
**சுற்றம் ஓம்பலும் பிறவும் மன்ன கிழவோள் மாண்புகள்" (தொல் - நூ - 150)**

என்று கற்புநிலை ஒழுக்க நிலை நன்னெறி பிறரை உபசரித்தல் பெண்ணின் கடமை என்றனர். ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே என்ற புறநானூற்றுப் பாடலின் வழி குழந்தையை பெற்று தருதலும் பெண்ணின் கடமை என கொண்டனர்."உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதை மையமாகக் கொண்டு சிலப்பதிகாரக் காப்பியம் படைக்கப்பட்டிருக்கிறது. அதில் தன் கணவனுக்காக மதுரையை எரித்தாள் அதனால் பாண்டிய மன்னனே இறந்தார் என்பதும் கணவன் மீது எவ்வளவு அன்பு கொண்டிருந்தால் என்பதும் பெறப்படுகின்றது. அன்பின் அடையாளமே பெண்தான் என்பதை இதன் மூலம் உணர முடி கின்றது.

**முடிவுரை**

சங்க காலத்தில் வீரத்தின் விளை நிலமாகவும் போர்க்களத்தில் வீரமுடன் போராடிய வீரமங்கையர்களாகவும் பெண்கள் திகழ்கின்றனர். சங்ககால காப்பியங்களான ஐம்பெருங்காப்பியங்களில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணியத்திற்கு பெருமை தேடித் தந்தனர். சங்க காலத்திலேயே பெண்கள் கல்வியில் சிறந்தவர்களாகவும் தலைமை பண்பு கொண்டவர்களாகவும் சரித்திர சாதனை புரிந்துள்ளனர் அதற்கு சான்று பெண்பாற் புலவர்கள்தான். எனவே நாட்டை ஆட்சி செய்ய மன்னன் இருந்தாலும் ஒரு வீட்டை ஆட்சி செய்ய ஒரு பெண்தான் வேண்டும் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை வாழ்க பெண்ணியம் வளர்க பெண்ணியம்.

**துணை நூற்பட்டியல்**

[1] *புறநானூறு மூலமும் உரையும்*, அ.ம.பரிமணம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[2] *நற்றிணை மூலமும் உரையும்*, கு.வெ.பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
[3] *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.